பக்கங்கள் 8 விலை சதம் 15

புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 18-2-62 ஞாயிறு | இதழ் 36

புத்தரக்கித்த தேரோவின் கதையை 3-ம் பக்கம் காணலாம்!

'கசிப்பு'க்கு அரசாங்கச் சீனி!

உணவு இலாகா ஊழல்!

'கசிப்பு' என்று சொல்லப் படுகின்ற கள்ளச் சாராயம் என்ற நஞ்சு காரணமாக நமது நாடு கெட்டழிந்து போய்க் கொண்டிருப்பது அனைவரும் அறிந்ததே! இந்தக் 'கசிப்பு' க்காரர்களைப் பிடித்துத் தண்டிப்பதற்கு அரசாங்கம் விரும்பியபோதிலும் நமது அரசாங்க இலாகாக்களில் நீக்கமற நிறைந்துள்ள 'லஞ்சப்பரின்' உதவியோடு இந்தக் கசிப்பு மன்னர்கள் சொகுசான வாழ்வு நடத்துவதும் எல்லாருக்கும் தெரிந்த சங்கதிகளே. சிறிது காலத்துக்கு முன் இறந்து அழுகிப்போன 'கரப்பொத்தான்' பூச்சிகளும், பல்லிகளும் கசிப்புச் சாராயம் தயாரிப்பதற்கெனச் சேமிக்கப்பட்டு வைத்திருந்த விஷயம் கண்டு பிடிக்கப்பட்டது! பத்திரிகைகளில் வெளியான இச் செய்தி வாசர்களுக்குப் புதியதல்லவாயினும், நாட்டின் சுகாதாரத்திற்கும், மக்களின் ஆரோக்கியத்துக்கும் இதனால் எவ்வளவு தீங்கு சம்பவிக்கும் என்ற உண்மையை அரசாங்கம் புறக்கணித்துவிட முடியாது.

விஷமிட்டுக் கொன்றவனுக்கு மரணதண்டனை விதிக்க வேண்டும் என்ற சட்டம் இருக்கும் பொழுது, 'கசிப்பு' என்ற பெயரில் விஷத்திராவகத்தை உற்பத்தி செய்யும் கொலைகாரர்களுக்கு அபராதம் மட்டும்தான் விதிக்கப் படுகிறது!

ஏற்கனவே பத்தாயிரம் ரூபா வரை பணம் சுட்டியுள்ள ஒருவனுக்கு என்றோ ஒரு நாள் அகப்பட்டபின் ஆயிரம்ரூபா அபராதம் வெகு துச்சம். அரசாங்கத்தினுல் நாட்டு மக்களுக்கு உபயோகம் இல்லாவிட்டாலும், உபத்திரவமாவது இல்லாமல் இருக்க வேண்டும். அண்மையில் 'கசிப்பு'க் காரர்களால் அரசாங்கத்தை ஏமாற்றி பெரு மளவில் நடத்தப்பட்டு வந்த ஊழல் ஒன்று அம்பலத்துக்கு வந்துள்ளது.

'உணவு இலாகா'வினுல் 'சுத்தம் செய்யப்படாத சீனி' லைசென்ஸ் பெற்ற சில வியாபாரிகளுக்கு விற்கப்பட்டு வந்தது. இந்த வியாபாரிகள் 'இனிப்பு சொக்கிளேற் தயாரிப்பாளர்கள்' என்ற பெயரில் தங்களைப் பதிவு செய்திருந்தார்கள். அது காரணமாகவே இவர்களுக்கு இந்தச் சீனி மலிவான விலைக்கு விற்கப்பட்டும் வந்தது.

ஆனுல் உண்மையில் பெரு மளவில் இந்தச் சீனி எதற்கு உபயோகப்படுகிறது தெரியுமா? கசிப்பு என்று சொல்லப்படுகிற கள்ளச் சாராய உற்பத்திக்குத்தான்!

சமீபத்தில்தான் இந்த விஷயங்கள் அம்பலத்துக்கு வந்து, 'உணவு இலாகா'வினர் மேற்படி வியாபாரிகளைப் பற்றிய விபரங்களைத் திரட்டத் தொடங்கியுள்ளனர். என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

தர்மலிங்கம் அடுத்த மேயர்?

கனவான்கள் ஒப்பந்தம் காப்பாற்றப்படுமா?

யாழ்ப்பாண மக்களது ஆவலை ஒரு சேரக் கவர்ந்து வரும் மேயர் தெரிவு பற்றிய விளக்கத்தைப் புதினம் தருவதில் மகிழ்ச்சி அடைகின்றது.

சென்ற ஆண்டு டக்டர் தர்மலிங்கம் அவர்களது குழுவில் நாலுபேர் இருந்தனர். திருவாளர்கள் டக்டர் தர்மலிங்கம், பீட்டர் சோமசுந்தரம், சி. தா. செல்லத்துரை, எஸ். அழகையா ஆகியோரே அக்குழுவினராவர்.

மேயராகவிருந்த துரைராஜா அவர்களது குழுவில் திருவாளர்கள் ஜோன், ஏ. நடராசா குவாஜி சுல்தான் ஆகியோர் இருந்தனர். மேற்படி நந்நான்கு பேர் இருந்தும் கூட தர்மலிங்கம் குழுவினரது ஒத்துழைப்புடன் திரு துரைராசா அவர்களை மேயராக்கினர். அடுத்த ஆண்டுக்கு, அதாவது இந்த ஆண்டுக்கு டக்டர் தர்மலிங்கம் அவர்களே இவ்வொப்பந்தப்படி மேயராக வேண்டும். பெருந் தன்மையுடன் உதவி மேயர் செல்லத்துரை அவர்கள் உரிய காலம் முடிய பதவியிலிருந்து விலகிக் கொண்டார். 'கனவான்கள் ஒப்பந்தத்தை' மறந்து மேயர் கதிரையைவிடமறுத்திருந்தார் திரு. துரைராசா. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர முயற்சிகள் நடந்ததும் ராஜினுமாச் செய்தார் என்று அவதானிகள் நம்புகிறார்கள். தற்போது திரும்பவும் மேயர் பதவிக்கு அவர் போட்டியிடக் கூடுமெனப் பேசிக்கொள்ளுகின்றனர். இம்முறை உதவி மேயராக வந்திருக்கவேண்டியவர் வைத்தியர் ஏ. நடராசா அவர்களே.

இக்கனவான்கள் ஒப்பந்தம் முறியக் காரணமாக விருந்தவர் குவாஜிசுல்தான் அவர்களே என்று பலரும் கருதுகின்றனர். ஏனெனில் உதவி மேயர் தெரிவிலன்று சமூகம் தராது விட்டு கனவான்கள் ஒப்பந்தத்தை இவர் முறித்தார்.

மேயர்கள் சொல்லை நம்பலாமா? துரையப்பா அவர்கள் மேயராயிருந்தபோது 'பிழை செய்தார்' பிழை செய்தார், என்பவர்கள், அதே மேயர் பதவி அடைந்தவர்களும் அதையே செய்யலாமா?

அதுநிற்க, அடுத்த மேயர் யார்? டாக்டர் தர்மலிங்கம் நியாயத்திற்கு மேயராகவேண்டியவர். கனவான்களை உணர அரிய சந்தர்ப்பம் இம் மேயர் தெரிவு.

வெற்றிப் பாதையில் தி. மு. கழகம்!

நமது ஈழத்துப் பத்திரிகைகள் வெளியிடுகின்ற 'தென்னிந்தியத் தேர்தல் செய்திகள்' உண்மை நிலையைப் பிரதிபலிக்கவில்லை என்பது ஒரு வருந்தக்கூடிய உண்மையாகும். இந்தியப் பத்திரிகைகள் தரும்செய்திகளையே இங்குள்ள பத்திரிகைகள் 'வெட்டி ஒட்டி' வெளியிடுகின்றன. பெரும்பாலான இந்தியத் தினசரிகள் தி. மு. க. வோடு மாறுபட்டவையாகும். எனவே அந்தப் பத்திரிகைகள் தி. மு. க. பற்றிய 'பொய்யும் புளுகும்' நிறைந்த செய்திகளையே பிரசுரிக்கின்றன. அவற்றைத்தான் நமது பத்திரிகைகள் மறுபிரசுரம் செய்கின்றன.

நமது நிருபர் தமிழ் நாட்டிலிருந்து அனுப்புகின்ற செய்திகளைப் பார்க்கும்போது தி. மு. க வினருக்கு இம்முறை பன்மடங்கு ஆதரவு பெருகியிருப்பதையும், காங்கிரசுக்கும் தி. மு. க. வுக்குமிடையில் மிகக் கடுமையான போட்டி இருப்பதையும் தெரிந்து கொள்ள முடிகிறது. கடந்த தேர்தலைக் காட்டிலும் இம்முறை தி. மு. க, அதிகஸ்தானங்களைக் கைப்பற்றப் போவது உறுதி!

தி. மு. க. கூட்டங்களுக்கு மக்கள் பெருத்த அளவில் கூடுகிறார்களாம்! 'ஆட்சியின் அநீதி'யை விளக்கும் தி. மு. க சுவரொட்டிகள் மிக்க கவர்ச்சியாக இருக்கின்றனவாம்!

ஆனுல் கம்யூனிஸ்ட்டுகளுக்குச் சென்றதடவை கிடைத்த நாலு ஸ்தானங்களாவது இம்முறை கிடைக்குமா என்பது சந்தேகம்தானும்...!

திரை மறைவில்

இராணுவத் தலைமை.

"இராணுவத்தின் எந்தப் பிரிவுக்கேனும், ஒருவர் தொடர்ந்து நாலு வருடங்களுக்கு மேல் தலைமை தாங்குவது, ஜனநாயக நாட்டிற்கு உகந்த சம்பிரதாயமல்ல என நாங்கள் கருதுகிறோம்" என்று இராணுவத்தைப் பற்றி கிரேஷன் அறிக்கை கூறுகிறது. இந்த அறிக்கையை மிக அண்மையில் அரசாங்கம் பிரசுரம் செய்துள்ளது.

தமிழரசுக் கட்சியில் மீண்டும் சலசலப்பு!

'யாழ்ப்பாணத்தான்–மட்டக்களப்பான்' பிரச்சினை தமிழரசு கட்சியில் சில காலத்திற்கு முன்னர் எழுந்ததும், அதைத் தொடர்ந்து "பிரிவினை பேசாதீர்!" என்ற அறிக்கையை 'புதினம்' வாயிலாகத் தமிழரசுத் தளபதி திரு. அ அமிர்தலிங்கம் வெளியிட்டதும் நேயர்கள் அறிந்ததே. இப்போது அமிர்தலிங்கத்தின் அறிக்கைக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் மட்டக்களப்பைச் சேர்ந்த புரக்டர் திரு. பூபாலரத்தினம் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். தாம் கட்சியின் பொதுச்செயளாளராகிய திரு. நாகநாதனுக்கு எழுதிய கடிதத்தில் 'இன்றைய நிலையில் யாழ்ப்பாணத்தான் மட்டக்களப்பான்என்றுபார்க்க வேண்டாம். திரு. செல்வநாயகம் அவர்கள்நோயாளியாகஇருப்பதால் கட்சியைப் பலப்படுத்துவதற்காக திரு. திருச்செல்வம் அவர்களையோ அல்லது திரு. சூரேசெட் தம்பையா அவர்களையோதான் சென்ட்டராக நியமிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டதாகவும் கூறியிருக்கிறார். மேலும் தந்தை செல்வநாயகமோ, அவரது சகபாடிகளோ, மட்டக்களப்பையும் அதன் மக்களையும் அறியாதிருந்த நிலையில், தலைவரது வாய்ச் சொல்லை நம்பிய திரு. இராசதுரையும் இன்னும் ஒரு சிலருமே தங்கள் வாய்ச் சாதுர்யத்தால் இந்த ஒற்றுமைக்கு வழி வகுத்ததாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணம் தொற்றுநோய் ஆஸ்பத்திரி

யாழ்ப்பாணம் தொற்றுநோய் ஆஸ்பத்திரியின் நிலைமை படுமோசமான முறையில் இருக்கிறது. இந்த ஆஸ்பத்திரியின் சுவர்கள் உழுத்துப்போய் இடிந்து விழுகின்றன. கூரை ஒழுகியபடி இருக்கிறது இங்குள்ள சில நோயாளிகளை எங்கர்வது போகும்படியாக அங்குள்ள வைத்திய அதிகாரிகளே கூறினர்களாம். நல்ல வேளையாக, சமீபத்தில், யாய்ப்பாணம் உதவி மேயர் திரு. துரைராசசிங்கம் இந்த ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிந்து பெரியாஸ்பத்திரி வைத்திய அதிகாரியிடம் முறைப்பாடு செய்திருக்கிறார். நிலைமை எப்போது சீர்படுமோ..? ஆண்டவனே அறிவார்...!

மலைநாட்டு மாணவர்களும் – 'மதி' மந்தி(ரி)யும்

நம்முடைய 'மதி' மந்திரியின் 'அற்புதமான' திட்டங்களின் பயனாக பல மலைநாட்டு மாணவர்கள் பாடசாலையில் இடம் கிடைக்காமல் திண்டாடி அலையவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அக்குழந்தைகளின் வருங்காலத்தில் அக்கறை கொண்ட பலர் அவர்களது இக்கட்டான நிலைமையை இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிடம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இது விஷயத்தில் காங்கிரஸ் தலைவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்களோ...?

பள்ளிக்கூடச் சங்கதிகள்.

'உங்கள் பாடசாலைகளின் மோசமான நிலைமை' களை எழுதி அனுப்பும்படி சில வாரங்களுக்கு முன்னால் எழுதியிருந்தேனல்லவா? இங்கே என்னுடைய மேசையின்மீது குவிந்து கிடக்கும் கடிதக் குவியலைப் பார்க்கும்போது நமது 'மதி' மந்திரியின் திறமை முழுவதும் எனக்கு விளங்குகிறது. பாடசாலை முடிவதற்கு முன்னரே வீடுபோய்ச் சேர்ந்துவிடும் ஆசிரியர்களைப் பற்றி கல்முனை சடாட்சரமும், பருத்தித்துறையைச் சேர்ந்த பூமணியும், நவாலியைச் சேர்ந்த ராமலிங்கமும் எழுதியிருக்கிறார்கள். இடிந்து விழுந்துகிடக்கும் கட்டிடங்களைப் பற்றியும், ஒழுகும் கூரைகளைப் பற்றியும் எழுதியவர்களின் பெயரைக் குறிப்பிடுவதானால் இந்தப்பத்திரிகையே இடம் போதாமல் போய்விடும். மன்னர் அன்பர் ஒருவர் மட்டும் ஒரு சுவையான விஷயத்தை எழுதியுள்ளார். அங்கு ஒரேயொரு ஆசிரியர் உள்ள ஒரு பள்ளிக்கூடம் உண்டு. அந்த ஆசிரியரோ கடந்த சில வாரங்களாகவே லீவாம். எனவே பள்ளிக்கூடம் பூட்டப்பட்ட நிலையிலேயே இருக்கிறதாம்!

'டைம்ஸ்' பத்திரிகை.

'டைம்ஸ்' பத்திரிகையில் கடந்த சில நாட்களாக 'ஆசிரியத் தலையங்கம்' எதுவும் வெளிவருவது கிடையாது. இது விஷயமாக எந்தவிதமான குறிப்பையும் எழுத நான் விரும்பவில்லை. காரணத்தோடுதான் அப்படி விடுகிறேன்!

முந்திக்கொள்ளும் வீ ஏ. கந்தையா

தமிழரசுக் கட்சியின் 'செயற்குழு'க் கூட்டங்கள் நடைபெறும் போது முறைப்படி கட்சியின் தலைவரான திரு. இராசமாணிக்கம்தான் தலைமை வகிக்கவேண்டும். அல்லது அந்த வேலையை தலைவர் செல்வநாயம் அவர்கள் செய்தாலும் யாரும் குறை சொல்ல மாட்டார்கள். ஆனால் சமீபத்தில் சில செயற்குழுக் கூட்டங்களுக்கு திரு. வீ. ஏ. கந்தையா தலைமை வகித்திருக்கிறார். அதுவும் அந்தக் கூட்டங்களில் கட்சியின் தலைவரான இராசமணிக்கம் பிரசன்னமாயிருந்தபோதே திரு. கந்தையா இந்த வேலையைச் செய்திருக்கிறார். அவர் தலைமை வகிக்கவேண்டி ஏற்பட்ட நிர்ப்பந்தங்கள் என்ன...? இந்த வேலையைச் செய்வதற்கு முந்திக்கொண்டு போகும் பழக்கம் திரு. கந்தையாவுக்கு ஏற்பட்டது ஏன்.....?

கேள்வியும் - பதிலும்!

கே: நமது எதிரியின் எதிரி நமக்கு நண்பனா?

ப: ஆமாம், இல்லாவிட்டால் கிருபளானியை ராஜாஜியும், கிருஷ்ண மேனனைக் கம்யூனிஸ்ட்டுகளும் ஆதரிப்பதற்குக் காரணம் இல்லையே!

கத்தாப் பிரசங்க நோட்டீஸ்.

வருக! திரண்டு வருக!!

இன்று இரவு 10 மணியளவில்

.....ஹோட்டலில்

'வழவழாக்கறிஞர்' அமராசிங்கம் அவர்கள்

"பத்திரிகா தர்மம்"

என்ற பொருள்பற்றி ஒரு கத்தாப் பிரசங்கம் செய்வார்.

அக் கூட்டத்தில்

"விளம்பரங்கள் பெறுவது எப்படி?"

என்ற தத்துவம் விசேஷமாக விளக்கப்படும்!

எழுத்தாளர் காய்ச்சல்.

எழுத்தாளர் பலர் உருப்படியான இலக்கிய முயற்சிகளைக் கைவிட்டு, சாதாரண 'பிட் நோட்டீஸ்' அடிக்கும் வேலையில் இறங்கியிருக்கிறார்கள். ஒருவரையொருவர் திட்டியும், கேள்விகள் விடுத்தும், ரகசியக் கடிதங்கள் அனுப்பியவண்ணமாக இருக்கிறார்கள். இந்த வேலைகளினால் ஏற்படக் கூடிய பலன் என்ன என்பது எனக்கு விளங்கவில்லை.

— "அம்பலத்துறைவோன்"

என்ன சேதி?

பிரியாவிடை.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் பன்னிரண்டு வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றி, அண்மையில் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்கு மாற்றலாகியுள்ள திரு. ஏ. சுந்தரம்பிள்ளைக்கு, கடந்தவாரம் ஆசிரியர்கள் பிரியாவிடையளித்தனர்.

✠ ✠

ஆண்டுவிழா.

மத்திய கொழும்பு வீட்டு வாடகை செலுத்துவோர் சங்கத்தின் முதலாவது வருடாந்த விழா கடந்த 11-2-62 அன்று மருதானை அரசினர் மத்திய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

✠ ✠

பரிசு.

வடமாகாணக் குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய பேச்சுப் போட்டியில், நெல்லியடி அரசினர் மகா வித்தியாலய மாணவி செல்வி சரஸ்வதி முருகேசு பரிசு பெற்றார்.

✠ ✠

நிர்வாகிகள் தேர்வு.

காத்தான்குடி இஸ்லாமிய சேவாமன்றப் பொதுக்கூட்டம், 'திரு குர்–ஆன்' மதரஸாவில் நடைபெற்றது புத்தாண்டு நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

✠ ✠

'திருமகள்'

கொழும்பிலிருந்து வெளிவரும் மாணவர் பத்திரிகைகையான 'திருமகள்' வந்துகிடைக்கப் பெற்றோம். இதன் ஆசிரியர் 'குகா' தமிழ்வாணனின் 'கல்கண்டு' நடையைப் பின்பற்றாமல், தனக்கென ஒரு நடையை வகுத்துக் கொள்வதே சிறப்பு.

✠ ✠

ஈழக்கலை மன்றம்.

வெள்வத்தை 57–ம் ஒழுங்கையில் உள்ள கொழும்புத் தமிழ்ச் சங்கப் பணிமனையில் திரு. இ. சதாசிவம்பிள்ளை தலைமையில் ஈழக்கலை மன்றத்தாரின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

✠ ✠

தீர்த்த விழா.

திருக்கேதீச்வர ஆலயத்தில் கடந்த 4-2-62 ஞாயிற்றுக்கிழமையன்று தை அமாவாசைத் தீர்த்த விழா நடந்தேறியது.

✠ ✠

விவசாயக் கழகம்.

கோப்பாய் இளைஞர் விவசாயக் கழகத்தின் பொதுக் கூட்டம் திரு. பி விக்னஸ்வரன் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது.

புத்தரகித்த தேரோவின் வாழ்க்கை வரலாறு!

[சென்றவாரத் தொடர்ச்சி]

களனி இராஜமகாவிகாரைக்கு அருகாமையிலுள்ள இவரது இல்லம் நல்ல காற்றோட்டமுடையதாயும், குளிர்ச்சி மிகுந்ததாயும் இருந்தது. இவரது இல்லம் எப்பொழுதும் நன்கு அலங்கரிக்கப்பட்டுக் கண்ணைக்கவரும் காட்சி அளித்துக்கொண்டிருந்தது மீள்சக்தியுடைய, இருவர் படுத்து உறங்கக் கூடிய அகலமான இவருடைய படுக்கையில் பஞ்சணைமெத்தை விரிக்கப்பட்டிருக்கும். புத்தரக்கித்த தேரோ இந்த நிச்சய மற்ற உலக வாழ்வில் இச்சை கொண்டு பணம், பலம், பெருவாணிபம், செல்வாக்கு ஆகியவற்றின் மத்தியில் மிக மிடுக்குடன் வாழ்ந்துவந்ததுமல்லாமல், பல ஈகழ்ச்சிகள் நிறைந்த 1956க்கும் — 59 க்கும் இடையே உள்ள மூன்று வருடங்களிற்குள்; இந்தக் குறுகிய கால உலகவாழ்வை ஒரு பொருட்டென மதித்து; தன்னோர் பிரமாண்டமான மனிதன் என நினைத்து மிக ஆடம்பரமான வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தார் என்ன ஆச்சரியம்! ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த இவர் இப்படியான ஒரு பெரிய நிலையை எப்படிப் பெற்றுக்கொண்டார்? நல்ல காலம்; எதிர்பாராத அதிர்ஷ்டம் அரசியல் தொடர்பு அனைத்தும் ஒருங்கு சேர்ந்து செல்வாக்கையும், அதிகாரத்தையும் உபயோகிக்கக்கூடிய நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது இவரை.

புத்தரக்கித்ததேரோவின் இல்லத்தில் ஒவ்வொரு நாட்காலையிலும் ஆசிரியர்கள், பாராளுமன்ற அங்கத்தினர்கள்; தலைமைக்காரர்கள்; கட்சி உத்தியோகத்தர்கள்; சலுகைகள் பெறுவோர்கள்; மாற்றங்கள் தேடுபவர்கள்; குத்திரதாரர்கள் இன்னும் பலரும் அங்கு சமூகமளித்திருப்பார்கள். இவர் தனது நீதி மன்றத்தை களனி இராஜ மகாவிகாரையில் வைத்துக்கொள்வார். அச்சமயத்தில் யாராவது ஒரு மந்திரியுடன் அடிக்கடி தொலைபேசியின் மூலம் பேசிக்கொள்வது வழக்கம். காருண்யம் மிக்க அரசாங்கத்தார் கொழும்பில் இவர் எவருடனும் தொலைபேசியின் மூலம் நேரடியாகத் தொடர்பு கொள்வதற்கு வசதியளித்திருந்தனர். அரசாங்கத்திற்குப்பின்நின்று தனது அதிகாரத்தைச் செலுத்தும் வல்லமை இவருக்கு நிறைய இருந்தது. இலங்கையிலுள்ள எந்தப் பெரிய மனிதனிடத்திலும் தட்டுத்தடங்கலின்றி நேரடியாகச் செல்லக்கூடிய பெருமை இவருக்கு இருந்து வந்தது என்பது உண்மையே.

1956—59க்கும் இடையில் ஓர் ஐக்கிய நாட்டு எழுத்தாளர் புத்தரக்கித்ததேரோவின் இல்லத்திற்குச் சென்றிருந்தார். அந்நியோன்யம், சினேக மனப்பான்மை, கூட்டுறவு யாவும் நிறையப்பெற்ற புத்தரக்கித்ததேரோ "உங்களுடைய குடிபானம் என்ன?" என்று அந்த எழுத்தாளரைக் கேட்டார். மஞ்சள் நிற அங்கியை அணிந்திருக்கும் புத்தபிக்குவினிடம் வேறு எதையும் கேட்பது அழகல்ல என்று உணர்ந்து, அச்சத்துடன் "குளிர்பானம்" என்று பதில் அளித்தார் அந்த எழுத்தாளர். "இல்லை, இல்லை, உங்களுடைய குடி யென்ன?" என்று மறுபடியும் கேட்டார் அந்த புத்தபிக்கு. கேட்டுச் சில செக்கனுக்குள் முதல்தரமான "விஸ்கி" மேசைக்கு வந்தது. விஸ்கி, பிரண்டி, ஜின், வையின் போன்ற அந்நிய நாட்டுக் குடிவகைகள் இவருடைய குளிர்பானப் பெட்டிக்குள் எந்நேரமும் நிறைந்திருக்கும். இந்த விதமான மிகக்கப்பிரமான வாழ்க்கையே நடாத்தி வந்தார் இராஜமகாவிகாரையின் பிரதம புத்தபிக்கு புத்தரக்கித்ததேரோ.

என்ன பிழை நேர்ந்தது? அவருடைய சரீர அமைப்பில் உயிருக்கு அபாயகரமான குறை என்ன? என்பதுதான் அந்த மனிதனைப்பற்றி எவருக்கும் உள்ள சுத்தமான சொந்தக் கருத்தாயிருக்கும். ஆனால்; அந்த மனிதனைப் பரவசப்படுத்தியது அவருடைய அளவுகடந்த அதிகாரம்தான் என்பதை எவரும் உணர்ந்து கொள்ளாது விட முடியாது. அவருடைய மோட்டார் வண்டிகள், தொலைபேசும் கருவிகள், காரியதரிசிகள், பிரசித்தி பெற்ற தயாளம், இவைகள் அனைத்தும் அவர் வேண்டுமென்றே வெளிப்படுத்தும் அவருடைய ஆளப்பதிந்த அதிகாரத்தின் பிரக்ஞை. அழகான தேகக்கட்டுடைய இந்த மனிதனிடத்திலிருந்து உதயமான பிரமாண்டமான தன் நம்பிக்கை அவரை நேரடியாகப் பார்வையிட்டவர்களின் ஞாபகத்தில் ஆளப்பதிந்திருக்கும். அவருடைய உள்ளக் கிடக்கையிலிருந்து வெளித்தோன்றிய வசீகரத்துடன் கலந்த அதிகாரபூர்வமான தன் நம்பிக்கையை எவரும் தடுத்து நிறுத்த முடியாமலிருந்தது. வரையற்ற அதிகார வெறிபிடித்த எந்த ஒரு மனிதனும் இடையூறுகள், தடைகள் எதையும் சகித்துக்கொள்ள மாட்டான். இது அவ்விதமான மனிதரிடத்தில் பொருந்தியுள்ள விசேட குணமேயாகும். புத்தரக்கித்ததேரோ நல்ல டாம்பீகமான, தயாள குணமுள்ள அன்பான சினேகன் என்று எங்கும் விளங்கப்பெற்றவர். ஆனால் சில சமயங்களில் இரக்கமற்ற பயங்கரமான எதிரியாகவும் இருப்பார்.

வெளியுலகில் ஆடம்பரமான வாழ்க்கையை அனுபவித்து வந்த புத்தரக்கித்த தேரோ 1959-ம் ஆண்டு செப்டம்பர் 25ல் நடைபெற்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் கொலைவழக்கில் சதிக் குற்றஞ் சாட்டப்பட்டுச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டார். இலங்கைமாநகரின் மத்தியில், மிகப் புராதன பௌத்த தேவாலயத்தின், பிரதம குருவாக இருக்கும் வரை கழிந்ததன் நாட்கள்; அந்த நாட்களோடு தொடர்புடைய நிகழ்ச்சிகள், நிகழ்ச்சிகளோடு தொடர்புடைய மனிதர்கள்; அவர்களுடைய உறவுகளெல்லாம் மெல்ல மெல்ல அவரை விட்டு நீங்கியது. உயர்தர நீதிமன்றத்தினரால் பண்டாரநாயக்கா கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது அநேக நாட்கள் விசாரணையின் பின் புத்தரக்கித்ததேரோவை சதிக்குற்றவாளியெனக் கண்டு மரணதண்டனை விதிக்கப்பட்டது. புத்தபிக்குவின் உடையைக் களைந்தெறிந்துவிட்டு மரண அறையில் வாசம் செய்து கொண்டு, தமக்கு விதிக்கப்பட்ட தண்டனை அநீதியானதென்று மனுச்செய்துகொண்டார் இவர்! இவரது மனுவின்பேரில் ஐந்து நீதிபதிகளைக் கொண்ட உயர்தர நீதிமன்றத்தினர் இவர் வழக்கை விசாரணை செய்தார்கள். 15—1—62ல் அப்பீல் கோட்டு நீதிபதிகள் மரண தண்டனையை நீக்கி சீவியகால வரை சிறைத்தண்டனை விதித்துள்ளார்கள். மன்னனாய் வாழ்ந்தவர் மறியலில் வாழுங் காலம். பொன்னெடு பொன் குவிந்தாலும் விதிவலி மிக்கதாமே.

மனிதர்களுக்கு தோலின் மினுமினுப்பாலும்; உடலின் கருமையாலும்; அவயவங்களின் அழகாலும் வருகின்ற கவர்ச்சி நிலையற்றது. ஆனால்; அறிவினால் வருகிற அழகு நிலையானது—உயர்ந்தது— நிலையற்றது என்பதையும் நிலத்தைப்போல் தன்னை அறைந்தவர்களைத் தாங்கும் பொறுமையும், மலையைப்போல் நிலைகலங்காமல் தன்னிடமிருந்து கொள்ளக் குறையாத வளமும்; மலரைப்போல் மென்மையும்; துலாக்கோலைப்போலநடுநிலை பிறழாத தன்மையும் உடையவர்கள் தாம்பிறருக்கு மதத்தைப் பற்றி போதிக்கும் மத குருவாக இருக்கத் தகுதி உடையவர்கள் என்பதையும் அறவே மறந்து பணம், பலம், செல்வாக்கில் லயித்து அன்று வாழ்ந்தமையினால்இன்று சிறைச்சாலையில் சீவியகால வரை வாழும் துர்ப்பாக்கிய நிலையை அடைந்துள்ளார் என்றே கூறலாம்

புங்கையூர் ஏ. கே. செல்லத்துரை.

சிறுகதை எழுத்தாளர் கவனத்துக்கு

'புதின'த்தில் இந்த வாரத்திலிருந்து சிறு கதைகள் வெளிவருமென்பது உங்கட்கு ஏற்கனவே தெரிந்ததே! உங்களது தரமான சிறுகதைகளைப் புதினம் விரும்பி வரவேற்கிறது. ஆனால் ஒரு விஷயம்..... 'புதின'த்தின் ஒரு பக்கத்துள் அடங்கக் கூடிய முறையில் சிறுகதை இருப்பது அவசியம்.

அச்சாரம் ஒன்று தா!

முத்தாரம் தாவென்று கேட்டேன் அவள்
மூல்லையிள நகையொன்றை உதிர்த்துப் போனாள்
பித்தானேன் பின் சென்றேன் 'என்னைப்பார்த்துப்
பேசாயோ நீயொருகால் பேசேன்' என்றேன்.

"கல்லாமோ உன்நெஞ்சம் இல்லை! இல்லை!!
கற்கண்டே!; கரைந்திடவும் கூடும் அன்றே
சொல்லாலே பயனில்லை: இருந்தும் அந்தச்
சொல்லொன்றே போதுமடி என்ன எண்ணம்?

கண்ணலம் என்றுல் நீகசப்ப தேனே?
கரும்பே இவ் வுலகிருக்கும் இன்பம் அஃதே
இன்னலும் வீணன காலம் போக,
இனியுமேன் தாமதம்நீ என்ன சொல்லு!

காதலிநீ காதலன்நான் கண்ணும் நெஞ்சும்
கலந்தன பின்னேது கதை யென்று நின்றாய்?
போதாதா! எனைநம்பு பொன்னே வையம
பொன்றிடினும் நம்காதல் பொன்று துண்மை.

கவிகம்பன் மகன்காதல் செய்தான் மாண்டான்
காளிதா சன்அவனைக் கலங்க விட்டான்
புவிபோற்றும் ரோமியோ யூலியட்டும்
போக்கற்ற காதலர்கள்; பேயே விட்டார்.

லைலாவும் மசினும் என்ன... செத்தார்
ராமர்தான் சீதையையும் விட்டார் காட்டில்,
கதைசொன்ன காதலர்கள் எல்லாம் நம்போல்
கவிபாடி வாழ்ந்தாரோ இல்லை யன்பே!

அச்சாரம் ஒன்றுதா இப்போ போதும்
அடியென்ன வந்துவிடும் அழுகிப் போமா?
மச்சாள்நீ மாப்பிள்ளைநான் மணமோ நாளை
மாட்டேன்என் னுதே தா இப்போ முத்தம்.

— 'நில்லைச் சிவன்'

சிறு கதை

கடவுளின் கதை

பொன்னுலக் குமாரசாமி

கடவுள் சுவீகரிப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அவருக்கு உதவி செய்யக்கூடிய வாய்ப்பொன்று சமீபத்தில் எனக்குக் கிடைத்தது.

கிட்டத்தட்ட பத்து வருடங்கள் கழிந்த பின்னர், சமீபத்தில், நான் எனது கிராமத்திற்குப் போயிருந்தேன். 'அல்லல தொல்லல' களிலிருந்து விடுபட்டு சிறிது காலத்திற்கு ஆறுதலாக வீட்டோடு இருந்துவிட்டு வரலாம் என்ற நினைவோடுதான் நான் என்னுடைய கிராமத்திற்குப் போயிருந்தேன். அந்தச் சந்தர்ப்பத்தில் தான் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

'எட்டுக் கிரகங்களின் சேர்க்கை' காரணமாக உலகம் அழிந்து விடுமோ என்ற பயம் உச்சக் கட்டத்தில் இருந்த காலம் அது. எண்ணூறு வருடங்களுக்குப் பின்னர் எட்டுக் கிரகங்கள் மகரராசியில் ஒன்று கூடுவதாகவும் அதனால் உலகிற்கும் உயிர்களுக்கும் பல உற்பாதங்கள் ஏற்படவிருப்பதாகவும் சோதிடர்கள் எல்லாரும் பலமாகப் பயங்காட்டியிருந்தார்கள்.

நான் கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்த அன்று எனக்கு வேண்டிய காலை உணவைத் தந்துவிட்டு எனது தாயாரும் மற்றும் வீட்டில் உள்ளவர்களும் கோயிலுக்குப் போகப் புறப்பட்டார்கள்

"இந்த நாட்களில் திருவிழாக் கூட இல்லையே? கோயிலில் என்ன விசேஷம் ... ?" என்று நான் கேட்டேன்.

'கிரகபீடை' நீங்குவதற்காக 'மகாயாகம்' நடப்பதாகவும் ஊர்மக்கள் எல்லாரும் பல காணிக்கைகளைக் கொண்டு சென்று கொடுப்பதாகவும் கூறிவிட்டு என்னையும் வரும்படி அழைத்தார்கள்.

'நீங்கள் போய்வாருங்கள்" என்று அவர்களிடம் சொல்லி விட்டு நான் கட்டிலில் திரும்பிப் படுத்துக்கொண்டேன்.

'நம்பிக்கைகளை' நம்பமறுக்கின்ற குணம் எனக்கு அமைந்திருந்தது.

'ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்களை' நம்பி வாழும் மனிதர் நிறைந்த உலகில் நான் ஒரு தனி மனிதனாகவே வாழ்ந்துவந்தேன்.

ஆனால்—

இந்தச் சிந்தனைகளும் உணர்ச்சிகளும் நீண்டநெடுங்காலமாக என்னை ஆட்கொண்டிருந்தவை அல்ல.

சிறுவர்களாக இருந்த காலத்தில் எங்களுடைய விளையாட்டுக்கள் கூட 'கடவுள், சாமி திருவிழா' என்பனவாகவே இருத்தன. கணபதி ஐயருடைய மகன் ராமசேஷன், நாமுத்தர் வீட்டுச் சுப்பு, ஏரம்பு வாத்தியாருடைய பேரன் ராமலிங்கம், நான் ஆகிய எல்லாரும் அந்தக் காலத்தில் ஒரு கோஷ்டியினர் நாங்கள் விளையாடாத விளையாட்டுக்களும் செய்யாத சேட்டைகளும் அந்தக் காலத்தில் இல்லையென்றுதான் சொல்லவேண்டும் எங்காவது விசேஷமான சாத்துப்படி மேளத்தோடு கூடிய திருவிழா நடந்தால் நாங்கள் எல்லாரும் சேர்ந்துதான் போவோம். அடுத்தநாள் நாங்கள் நடத்துவது திருவிழா விளையாட்டுத்தான்! 'குமுக்காக்' கணபதியும், 'குழல்' அண்ணாச் சாமியும் தோற்றுப்போகும் படியாகக் கைவண்ணம் காட்டக்கூடிய திறமை சுப்புவிடமும், ராமலிங்கத்திடமும் இருந்தது. பூஜைகள் அனைத்தும் ராமசேஷன் பொறுப்பு!

எனக்கு இன்று கூடப் பசுமையான நினைவுளாகச் சில காட்சிகள் நெஞ்சத்தில் மின்னுகின்றன. சில சமயங்களில் நாங்கள் நடத்தும் திருவிழாக்கள் வாரக்கணக்கில், மாதக்கணக்கில் நீண்டு விடுவதும் உண்டு சில சமயங்களை இப்போது நினைக்கும்போது சிரிப்புத்தான் வருகிறது.

ஒருநாள் நாங்கள் எல்லாரும் கடற்கரைக்குப் போயிருந்த சந்தர்ப்பத்தில் கடலின் ஓரமாகத் தண்ணீருக்குள் அழகான ஒரு கல் இருப்பதைக் கண்டோம் நான்தான் முதலில் அதனைக் கண்டவன். ஆசையோடு ஓடிப்போய் அதனை எடுத்துக்கொண்டேன். அந்தக் கல்லைக் கண்டதும் "சாமி மாதிரி இருக்குதடா!" என்று சுப்பு சத்தம் போட்டான். அவன் சொல்வதில் உண்மை இருப்பதாகவே எங்களுக்கும் தோன்றியது. உடனே திருவிழாச் செய்யத் தொடங்கிவிட்டோம். எங்களுடைய திருவிழா தொடர்ந்து வாரக்கணக்கில் மாதக்கணக்கில் நடந்து வந்தது கிராமத்துப் பெரிய மனிதர்கள் சிலருங்கூட நாங்கள் பூஜைசெய்து கொண்டு நிற்கும் போது அந்த வழியாகப் போக நேர்ந்தால் எங்களுடைய 'கடவுளை' வணங்கி விட்டுத்தான் சென்றார்கள். எங்களுக்குத் திருப்தியாக இருக்கட்டும் என்று நினைத்தார்களோ அல்லது அந்தக் 'கடவுளை' ஏற்றுக்கொண்டார்களோ தெரியாது! ஆனால் அந்த வழியாகக் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் சிலர் உண்மையிலேயே அதனைக் கடவுளாகப் பாவித்துப் பக்தி சிரத்தையோடு வணங்கி விட்டுத்தான் கடலில் இறங்கினார்கள் அந்தக் காலத்திலேயே—உண்மையிலேயே உள்ளத்தில் ஒருவகைப் பக்தி உணர்ச்சி ஊற்றெடுக்க விளையாடித் திரிந்த நேரத்திலேயே—நாங்கள் அந்த மனிதர்களைப் பார்த்துச் சிரிக்கத் தவறுவதில்லை.

(2)

நான் பிரயாண அலுப்புத்தீர நல்லதொரு நித்திரை "போட்டு" விட்டுக் குளித்துச் சாப்பிட்டு முடித்த போது ஊர்மக்கள் எல்லாரும் 'கிரக பீடை ஒழிப்பு' வேலையெல்லாம் முடிந்து விட்டுக்குத் திரும்பியிருந்தனர். காலாற உலாவி வரலாம் என்ற நினைவோடு பிள்ளையார்கோவில் பக்கமாக நடந்துவரக் கிளம்பினேன்.

பிள்ளையார் கோவிலுக்கு முன்னால் இருந்த கல் ஒன்றில் கணபதி ஐயர் ஆறுதலாக உட்கார்ந்து பேப்பர் பார்த்துக்கொண்டிருத்தார். என்னைக் கண்டதும் "வாருங்கள்..... இன்றைக்குத்தான் பயணத்தாலை வந்தனீங்களோ ..? என்று வரவேற்றார்.

"ஓமோம்!" என்று கூறிவிட்டு அவரோடு உட்கார்ந்து ஊர்ப் புதினங்களைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தேன். எங்களுடைய கதைக்குள் 'எட்டுக்கிரக சேர்க்கையும் வந்து சேர்ந்தது.

"நீங்கள் தானே நடத்துவது. ...'மகாயாகம்' எல்லாம் எப்படி நடக்கிறது?" என்று கேட்டேன்.

ஐயர் சிரித்தபடியே என்னைப் பார்த்துச் சொன்னார்— 'மகாயாகம் நடத்துவது என்னுடைய மகன்தான். அதுவும் இங்கே கிடையாது, அவன் கலியாணம் முடித்து தனிக்குடும்பமாகி வருஷம் மூன்றாகி விட்டது. அவன் பாடு அவ்வளவு பிழையில்லை. அவன் பூஜை செய்வது கடற்கரையிலுள்ள 'காவல் சாமி'க்குத் தான்! மூர்த்திகரம் நிறைந்த கடவுளாக மக்கள் எல்லாரும் அதைக் கருதுகிறார்கள். அங்கேதான் மகாயாகம் நடக்கிறது" ஐயர் பேசும்போது அவருடைய சன்னத்தில் விழுந்த சுழிகள் அவரது மலர்ந்த முகத்திற்கு மேலும் அழகு கூட்டின.

"என்ன ஐயா, கடற்கரையிலே கோவில் புதிதாகக் கட்டியிருக்கிறார்களா?" என்று கேட்டேன்.

இல்லை இன்னும் பெரிய கோயிலேதும் கட்டவில்லை அந்தச் 'சாமி'க்கு மூர்த்திகரம் ஏற்பட்டு ஐந்தாறு வருடங்களுக்கு மேலாகி விட்டன. இன்னும் இரண்டு மூன்று வருடங்களுக்குள் பெரிய கோயில் எழும்பிவிடுமென்று எதிர்பார்க்கலாம்!" என்றார்.

ஐயரோடு இந்தச் சங்கதியைப் பேசிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் என்னுடைய உள்ளத்தில் 'உருண்டு புரண்டு' கொண்டிருந்த உணர்ச்சிகளை என்னால் இப்போது சொல்ல முடியாது

ஐயரோடு பேசிக்கொண்டிருந்த அந்த நேரத்தில் அந்தக் 'காவல் சாமியை'ப் பார்க்க வேண்டுமென்ற ஆசை என்னுடைய உள்ளத்தில் பெரிய அலைபோல் பொங்கி எழுந்தது.

ஐயரிடம் விடைபெற்றுக்கொண்டு ஆவலோடு கடற்கரையை நோக்கி நடந்தேன்

(3)

கடற்கரையை அடைந்ததும் பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னால் எந்தக் கல்லை எடுத்து வைத்துக்கொண்டு நாங்கள் 'சாமி' விளையாட்டு விளையாடினோமோ அதே கல் இப்போது 'காவல் சாமி' யாக மாறிக் கம்பீரமாக வீற்றிருப்பதை என்னால் கண்டுகொள்ள முடிந்தது

அந்தச் 'சுற்று வட்டம்' முழுவதும் ஒருவித 'பரிசுத்தம்' நிறைந்த நிலையில் இருப்பதை எனது மனம் உணர்ந்து கொண்டது.

'காவல் சாமியையே பார்த்துக்கொண்டு நின்றேன்.

யாரோ எனது பெயரைச் செல்லிக் கூப்பிடும்ஒலி கேட்டது.

சுற்றுமுற்றும் பார்த்தேன். ஒருவரையும் காணவில்லை.

"நான் தானப்பா. கூப்பிடுகிறேன். இங்கே பார் !" என்ற குரல் எனது முன்னாலிருந்து எழுந்தது. என் காதுகளையும், கண்களையுமே என்னால் நம்பமுடியவில்லை.

'காவல்சாமி'தான் என்னோடு பேசியது,

"எனக்கு நீ ஒரு உதவி செய்ய வேண்டும்...!" என்று அந்தச் சாமி என்னிடம் கேட்டது,

"நானா...? உதவி செய்வதா ...?" என்று நான் கேட்டேன்.

"ஆமப்பா. உதவிதான் வேண்டும். கல்ப கோடி காலமாக எந்தவிதமான கவலைகளும் இல்லாமல் ஆழ்கடலுள் நான் அமைதியாகத் துயின்று கொண்டிருந்தேன் நாசமாய்ப்போன அலைகளும், காலமும் சேர்ந்து என்னை இந்தக் கரையில் கொண்டுவந்து தள்ளிவிட்டன உனக்கு ஞாபகம் இருக்குமென்று நினைக்கிறேன். நீதான் என்னைக் கடலிலிருந்து எடுத்து இந்த இடத்தில் தெய்வமாகப் பிரதிஷ்டை செய்து வைத்தாய் அப்போது எனக்கு ஏற்பட்ட மதிப்பையும் கௌரவத்தையும் பார்த்த போது எனக்குப் பெருமையாகக் கூட இருந்தது. எந்த விதமான வேண்டுகோளும் விடுக்காமல் நீங்கள் என்னிடம் அன்பு காட்டியபோது எனக்கு உண்மையிலேயே ஆனந்தமாகத்தான் இருந்தது. சில நாட்கள் கழித்து கடலில் மீன்பிடிக்கச் செல்பவர்களும் அப்படிச் செல்லும்போதெல்லாம் என்னை வணங்கிவிட்டுத்தான் கடலில் இறங்கினார்கள் இந்தமாதிரியாகக் காலம் செல்லச் செல்ல என்னுடைய கடவுள் மகத்துவம் அதிகரித்துக் கொண்டே போய் இப்போது ஊரில் உள்ளவர்கள் எல்லாரும் என்னிடம்தான் எதற்கு வேண்டுமானாலும் வருகிறார்கள். அலைகடலில் செல்பவர்களுக்குக் காவலனாக இருந்த நான் இப்போது ஊர் முழுவதுக்குமே காவலன் ஆகிவிட்டேன். என்னிடம் வருகின்ற மனிதர்கள் பல வகையானவர்கள் என்பது போலவே அவர்களுடைய குணங்களும் சரித்திரங்களும் பல வகையானவையாக இருக்கின்றன. பயங்கரமான சரித்திரம் படைத்த அந்த மனிதர்கள் விடுக்கும் வேண்டுகோள்களும், கேட்கும் வரங்களும் பயங்கரமானவையாகவே இருக்கின்றன. என்னைக் காட்டி இப்போது எத்தனையோ பேர் பிழைக்கத் தொடங்கிவிட்டார்கள் மற்றவர்களை ஏமாற்றுவதற்கு நான் ஒரு கருவியாகி விட்டேன். இப்போது

[7-ம் பக்கம் பார்க்க]

"ஆபாசம் இருக்கிறதே!"

நடிகை தேவிகா சொல்கிறார்!

கடந்த 4-2-62 'புதினம்' கலைப்பகுதியில், "எங்கே இருக்கிறது ஆபாசம்?" என்ற தலையங்கத்துடன் நடிகை ராதாராணி கூறிய அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்ததைமறந்திருக்க மாட்டீர்கள். அதில், "நீச்சலுடையுடன் நடிகைகள் தண்ணீரில் நீந்தும் காட்சியைத் திரைப்படத்தில் பார்க்கும் சிலர் அதை ஆபாசக் காட்சி என்று சொல்லுகிறார்கள். இதைதான் பலமாக ஆட்சேபிக்கிறேன். 'ஆபாசம்' என்பது என்ன என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளாதவர்கள்தான் அதை ஆபாசம் என்று சொல்லுவார்கள். நீந்தும் பழக்கம் இன்று நேற்றுத் தோன்றியதல்ல. ஆதிகாலம் முதலேஇருந்து வரும் ஒரு பழக்கம்' என்று 'ஆபாசம்' என்பதற்கு விளக்கம் தந்திருந்தார் நடிகை ராதாராணி.

இதை மனதில் கொண்டு, சக நடிகையான தேவிகாவிடம் நமது கலை நிருபர் அபிப்பிராயம் கேட்டபோது, அவர் பின்வருமாறு தம் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

"பெயர்தான் 'நீச்சல் உடை'யே தவிர, உண்மையிலேயே அது ஆபாச உடை என்பதுதான் எனது அபிப்பிராயம். நடிகைகள் ஆபாச உடைகளுடன் தோன்றுவதை நான் வெறுக்கிறேன். ஆனாலும், நடிகைகள்மேல் தப்பில்லை. அப்படி நடிக்கத் தூண்டும் தயாரிப்பாளர்கள்தான் இந்தஆபாசத்தை வளர்ப்பவர்கள். நம் நாட்டுப் பண்புக்கு ஏற்ற விதத்தில் படங்கள்எடுக்கப்பட வேண்டும்; மேல் நாட்டுப் படங்களைப் பார்த்துவிட்டு அதுபோல் ஆபாசக் காட்சிகளைச் சேர்க்க நினைப்பது சரியல்ல. இந்தமாதிரிக் காட்சிகளில் என்னை நடிக்கச் சொன்னால், நிச்சயம் நான் மறுத்துவிடுவேன்" என்று நடிகை தேவிகா அபிப்பிராயம் தெரிவித்தார்.

ஹல்லோ!... நான்தான்...

.... தேவிகா பேசுகிறேன். நீச்சல் உடையைப்பற்றிய என் அபிப்பிராயம் இந்தப் பக்கத்தில் இருக்கிறது படித்துப்பாருங்கள்!

ராதா மகன் தேவர் படத்தில்நடிக்கிறார்!

தேவர்பிலிம்சார் "தாயைக்காத்த தனயன்" என்ற படத்தைத் தயாரிக்கிறார்கள் அல்லவா?

இதில் எம். ஆர். ராதாவின் மகன் வாசுவும் நடிக்கிறார்! ராதா டீக் கடைக் காரராகவும், வாசு அதில் வேலை செய்யும் தொழிலாளியாகவும் நடிக்கிறார்கள்.

இந்தப் படத்துக்காக தேவர் வங்காளத்தில் இருந்துஒருவேங்கைப் புலியை ரூ. 20 ஆயிரத்துக்கு விலைக்கு வாங்கியிருக்கிறார். 13 அடி நீளமும், 4 அடி உயரமும் உள்ள பெரிய புலி இது! இதை இரண்டு பேர் பழக்குகிறார்கள்!

ஸ்ரீதருக்குப் பாராட்டு!

டைரக்டர் ஸ்ரீதருக்கு, தென்னிந்திய சினிமா சங்கம் ஒரு பாராட்டு விருந்து கொடுத்தது. சங்கத் தலைவர் ராம்நாத் தலைமை வகித்தார்.

"நெஞ்சில் ஓர் ஆலயம்" படத்தை சிறப்பாகத் தயாரித்ததற்காக ஸ்ரீதரையும் அவரது குழுவினரையும் பாராட்டி கரீம், ராமானுஜம், ராகவன், சண்முகம், மருதப்பன் ஆகியோர் பேசினர்கள்.

ஸ்ரீதர் பேசும்போது "நான் குறுகிய காலத்தில் படம் எடுத்தது போல் மேலும் 10 படங்களை மற்ற பட அதிபர்கள் எடுக்க வேண்டும்! அப்போதுதான் பலன் கிடைக்கும். நான் மட்டும் அப்படித் தயாரித்தால் ரசிகர்களுக்குச் சலித்துவிடும்! நான் இன்னும் 8 மாதத்திற்குச் சொந்தப் படம் தயாரிக்க மாட்டேன்! அதுவரை வெளிப் படங்களை மட்டும் டைரக்ட் செய்வேன்!" என்று சொன்னார்.

சங்கச்செயலாளர் ஜாம்பவான் எல்லாரையும் வரவேற்றார். தமிழ்வாணன் நன்றி தெரிவித்தார்.

'கொஞ்சும் சலங்கை'யில் மனோகரின் கம்பீரமான தோற்றம்!

18 மாதம் ஜெயில்!

சினிமா பாடகி சுசீலாவின் கார் டிரைவருக்கு!! ரூபா 12 ஆயிரத்துடன் கம்பி நீட்டியவர்!

சினிமா பின்னணிப் பாடகி சுசீலா வீட்டில் திருடிய கார் டிரைவருக்கு கோர்ட்டில் 18 மாதம் ஜெயில் தண்டனை விதிக்கப் பட்டது.

பணத்துடன் கம்பி!

சினிமா பின்னணி பாடகி சுசீலா கணவர் மோகன்ராவுடன் சென்னை ஆள்வார் பேட்டையில் வசித்து வருகிறார்! சுசீலாவும் அவர் கணவரும் சென்னையில் நடந்த 'கிரிக்கெட்' ஆட்டம் பார்க்கப் போனார்கள். டிரைவர் அருணசலம் காரை ஓட்டிக் கொண்டு போனர்.

விளையாட்டுப் பார்க்கும் அவசரத்தில் பெட்டிச் சாவியைக் காரிலேயே போட்டுவிட்டுப் போய் விட்டார் சுசீலா!

பம்பாயில் கைது!

இதைக் கவனித்த கார் டிரைவர் அருணசலம் காரை வீட்டுக்கு ஓட்டிக் கொண்டு போனர். வேலைக் காரியை ஏமாற்றி விட்டு வீட்டுக்குள் நுழைந்தார். பெட்டியைத் திறந்து 12 ஆயிரத்து 800 ரூபாயை திருடிக்கொண்டு மாயமாய் மறைந்து விட்டார்.

இதுபற்றி பொலீசில் புகார் செய்யப்பட்டது. பொலீசார் அவரை வலை போட்டுத் தேடினர்கள்.

கடைசியில் பம்பாய் 'ரெட் ஹில்ஸ்' என்ற இடத்தில் அருணசலம் கைது செய்யப் பட்டார்.

அருணசலத்திடம் இருந்து 700 ரூபாய் கைப்பற்றப்சட்டது. தூத்துக்குடியில் உள்ள அவர் அப்பா வீட்டில் இருந்து 8 ஆயிரம் ரூபாய் சிக்கியது. டிரைவர் அருணசலத்தின் மீது வழக்குத் தொடரப் பட்டது.

18 மாதம் ஜெயில்!

வழக்கை சென்னை 6 வது மாகாண மாஜிஸ்திரேட் ஆர். ராஜகோபாலன் விசாரித்தார். குற்றம் சாட்டப்பட்ட அருணசலத்திற்கு 18 மாதம் ஜெயில் தண்டனை விதித்து தீர்ப்புக் கூறினர்.

இத்தால்... சகலரும் அறிவது!

ஒரு குறை:

புதினம் உண்மையிலேயே புதினம்தான். ஆனலும் ஒரே ஒரு குறைமட்டும். எல்லா இதழ்களிலும் ''கேள்வி, பதில்'' இடம் பெறச் செய்ய வேண்டும்.

லுணுகலை — செல்வம், ரஞ்சி, ஞானம் ராணி.

திகைத்துப் போனேன் நான்!

'பத்திரிகை மசோதா'வைச் சாகடித்தவர் ஒரு பெண் மணி என்பதையும் அதிலும் ஒரு தமிழ்ப் பெண்மணி என் பதையும் அறிந்ததும் திகைத்துப்போனேன் நான். பத்தி ரிகைக்காரர் பெரிய புலிகள்தான். இதுபற்றிய விஷயங்களை மேலும் அறிய ஆவலாக இருக்கிறேன்.

கொழும்பு. 14 — அ. பொ. மயில்வாகனன்.

பஞ்சமிப் பிசாசோடு சண்டை

பஞ்சமிப் பிசாசோடு 'புதினம்' சண்டைக்குக் கிளம்பி விட்டதே! மூட நம்பிக்கைகளை வளர்க்கும் கட்டுக்கதை களைப் புதினம் கண்டிக்க முன்வந்ததை மனமாரப் பாராட் டுகிறேன்.

குருநகர். — அ. டேவிட்

அரசினரே அழுக்காக்குகிறார்கள்!

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையை மக்கள் அழுக்காக்குகிறார்கள் என, அங்குள்ள அறைச் சுவர்களில் கொழுப்புப் பூசியுள்ளார்கள் இதனல் வைத்தியசா லை யில் வேலைசெய்வோரின் ஆடைகள் அடிக்கடி அழுக்கடைகின்றன. இத்துடன் அரைச்சுவருக்குப் பூசப்பட்ட கொழுப்பு முழுச் சுவருக்கும் பரவுகிறது. அரசினரே இப்படி அழுக்கான வேலை செய்வது அழகல்ல.

யாழ்ப்பாணம் — க. பூராசா

நன்றி! நன்றி!!

''என்ன ஒரே நன்றியாகக் கூறுகிறீர். அப்படி உமக்கு நான் என்ன செய்து விட்டேன்'' என்று கேட்டேன். ''சனி ஞாயிறு நேரம் போவதென்றல் கடைசி பத்து ரூபாவென் றாலும் செலவு செய்வது வழக்கம். ஆனல் 'புதினம்' பத்திரி கையை நீர் அறிமுகம் செய்தபின் பதினைந்து சதம் மட் டும்தான் செலவாகிறது. அதுமட்டுமல்ல, சுவையான செய் திகளையும் அறிந்துகொள்கிறேன். உம்மை நான் மறக்க முடி யுமா'' என்று கூறினர் புத்தளம் சௌக்கியப் பகுதியில் கடமையாற்றும் எனை நண்பர் திரு. குகேந்திரபதி அவர்கள்

நவாலி தெற்கு — ஆ. தேவநேசன்.

பத்திரிகைகளின் விபச்சாரம்!

விழிப்புற்றிருக்கும் முஸ்லிம் சமூகத்தைப் பயன்படுத்தி பணம் பறிக்கும் எண்ணத்துடன் 'வீரகேசரி'யும் 'தினகர' னும் ஆரம்பித்துள்ள 'இஸ்லாமிய உலக மலரை'யும் 'முஸ்லீம் மஞ்சரி'யையும் சுட்டிக்காட்டி நாகூக்காகத் தாக்கியிருந்தார் 'அம்பலத்துறைவோன்'. அவர்கருத்தை நானும் ஏற்றுக்கொள் கிறேன். எங்களை ஒதுக்கப்பட்ட சாதியாகக் கணித்துத் தனி மலர் போடவேண்டாம். திறமை உள்ளவர்களுக்கு உரிய இடத்தில் மதிப்புத் தரட்டும். அது போதும்!

அழுத்காமம். — எம். ஏ. ஜாபிர்.

செருப்பைக் காணவில்லை!

சென்ற வாரம் நான் பஸ்ஸில் பிரயாணம்செய்து கொண் டிருக்கும் போது என்னுடைய ஒருகால் செருப்புக் காணமல் போய்விட்டது. எவ்வளவு தேடியும் அகப்படவில்லை. செருப்பை எடுத்த சீமான் யாரோ!

நிருமலை. — மு. பத்மாசனி.

இவரே எங்கள் அதிபர்!

(வேலணை அரசினர் மத்திய கல்லூரி.)

எங்கள் கல்லூரியின் வளர் ச்சிக்கு முக்கிய காரணகர்த் தாவாக இருப்பவர் எங்கள் அதிபர் திரு. வி. தம்பு அவர் கள் என்றல் மிகையாகாது. எங்கள் அதிபர் எமதுகல்லூ ரிக்கு கடமை ஆற்ற வந்து இத்துடன் பத்து வருடங்களு க்கு மேலாகியும் அவர் மாற் றலாகி வேறு பாடசாலைக்குச் செல்லாமல் இருப்பது ஆச்சரி யம் தான். மாற்றல் வராமல் அல்ல வந்தது. ஆனல் பெற் றோர்களால் தடுக்கப்பட்டது. இதிலிருந்தே எங்கள் அதிபர் எமது பாடசாலைக்கு இன்றி யமையாதவர் என் பது புல னாகும்.

எங்கள் அதிபருக்குக் கிட் டத்தட்ட ஐம்பது வயதிருக் கும். இடையிடையே வெள் ளிக் கம்பி போன்று நரைம யிர், காலர் இல்லாத சேட்டு, புன்சிரிப்புத் தவழும முகமும் கம்பீரமான தோற்ற மும் உடைய வர். ஒருநாளைக்கு இருமுறையாவது வகுப்புகள் அனைத்தையும் சுற்றிவந்துவி டுவார். அதிபரின் கால னி யின் சத்தம் எல்லா மாணவ ர்களுக்கும் பழக்கமானது. அ தன் சத்தம் கேட்ட உடனே யே பெட்டிப்பாம்பாக அடங் கிவிடுவார்கள். அதிபர் எந்த மாணவனையும் அதிகம் அடிப் பது இல்லை ஆனலும் அதி பர் என்றல் மாணவர்களுக்கு மரியாதை கலந்த ஒருவித பயம் எங்கள் அதிபர் இருக் கும் இடத்தில் சிரிப்புக்குக் குறையிராது. பாடத்தை அதி பர் படிப்பிக்கும் போது வகு ப்பில் இருந்து சிறு சிரிப்பொ லி அலையாகக் கிளம்பும். அதி பரின் தீட்சண்யமான கண்க ளுக்குமுன் எதுவித குற்றம் செய்த மாணவனும் தப்பிவிட முடியாது. பிரம்பால் அடிக் காவிடினும், சொல்லால் அடி ப்பதில் தீரர்.

ஆனலும் எங்கள் அதிபர் மனம் மிக வும் இனியது ஒரு மாணவனுக்குச் சிறுகா யம் பட்டாலும் துடி துடி த்து விடுவார். எங்கள் அதிபர் சைவப் பற்று மிகுந் தவர். ஆங்கிலத்தில் வல்லுனராக இருந்தாலும் தமிழிலேயே பேசுவார்.

எங்கள் அதிபரைப் பற்றி ஒரு பெரும் புத்தகமே எழுதி விடலாம். அதிபருக்கு நாங் கள் ஆயிரத்து நாநூறுபேரு ம் பிள்ளைகள். அதி பருக்கு மாற்றல் என்றல் எங்களுக் குப் படிப்பே செல்லாது.

அரும் பெரும் குணங்களை உடைய எங்கள் அதிபர் பல காலம் வாழ்ந்து தொண்டா ற்ற வேண்டும் என்று எல்லா ம் வல்ல இறைவனை வேண் டுகிறேன்.

க. பே. தாஸன் — நாரந்தனையூர்.

50 நாட்கள் சுற்றித்திரிந்த அஞ்சலட்டை!

நமது தபால் இலாகாவின் 'திறமை' காரணமாக உரியவ ரிடம் சென்று சேர்வதற்கு ஒரு அஞ்சலட்டை ஐம்பது நா ட்கள் எடுத்துக் கொண்டது.

கொழும்பிலிருந்து திரு. பி. என். நைனு முகம்மது என்ப வர் பசறையிலுள்ள திரு ஏ. சி. பக்கீர் முகம்மது என்பரு க்கு ஒரு அஞ்சலட்டை அனுப் பினர் தனக்குச்சு கமில்லை என வும் உடனே வரும்படியாகவும் அதில் அவர் தெரிவித்திருந் தார். ஆனல் செனறடிசம்பர் 21-ந் தேதி அனுப்பப்பட்ட அஞ்சலட்டை உரியவரிடம் சென்று சேருவதற்கு ஐம்பது நாட்கள் எடுத்துக் கொண் டது! ஐம்பது நாட்களுக்குப் பின்னராவது போய்ச் சேர்ந் ததே!

மீண்டும் இளமை பெறும் ஸ்பானிஸ் மாது!

112 வயதான ஜூவான் ஓர் டேகாவில்லாரியா என்ற ஸ்பானிஷ் ஸ்திரிக்கு பற்கள் மீண்டும் முளைக்கின்றன. அவ ளுடைய நரைத்த தலைமயிர் கள் மீண்டும் கறுப்பாக மாறி க்கொண்டிருக்கின்றன,

தமக்கு மீண்டும் இளமை திரும்பும் அதிசயத்துக்கான காரணங்களை அவளாலேயே அளிக்க இயலவில்லை. அவளைப் பேட்டி கண்டவர்களாலும் விஞ்ஞான ரீதியான விளக்கம் தர இயலவில்லை

ஸ்ரீமதி ஓர் டேகாவுக்கு 90 வயதுப் பிள்ளையொருவரும், 19 பேரன்களும், 30 கொள் ளுப் பேரன்களும் இருகின் றனர்.

கூரையில் படுத்துறங்கியவர் கைது செய்யப்பட்டார்!

மாரவல என்னும் இடத் தைச் சேர்ந்த ஏ. விமலதாச என்பவர், கம்பளையில் திரு. திசாநாயக்கா என்பவரின் வீட்டுக் கச்சூசின் முகட்டில் படுத்து நித்திரை செய்துகொ ண்டிருக்கும் பொழுது பொலி சாரால் கைது செய்யப்பட் டார்.

கைது செய்யப்பட்ட விமல தாச என்பவர்மீது முன்னரே ஏழு குற்றங்கள் கல்கிசைக் கோட்டில் பதிவு செய்யப்பட் டுள்ளதாம். இவ்வளவு கால மாகவும் இவர் பொலிசாருக்கு 'டிமிக்கி' கொடுத்துக் கொண் டிருந்தாராம்!

500 காதல் கடிதங்கள் எழுதிய பெண் இரத்தினபுரியை சேர்ந்த ஹீன்மெனிக்கா

இரத்தினபுரியைச் சேர்ந்த ஹீன்மெனிக்கா என்னும் பெ ண்ணைக் காணவில்லையென்று அவளது பெற்றோர் பொலீ சாரிடம் புகார் செய்தனர்.

சப் இன்ஸ்பெக்டர் மிராண் டா தேடுதல் போட்டபோது அப்பெண் சில்வா என்பவரு டன் இருந்ததைக் கண்டுபிடி த்தார். இருவரையும் கைது செய்து பொலீஸ் நிலையத்துக் குக் கொண்டு வந்தார்.

அப்பெண்ணைத் தான் கடத் திச் செல்லவில்லையென்றும், அவளாகவே விரும்பித் தன் னுடன் வந்தாகவும் கூறிய சில்வா அதற்கு அத்தாட்சியா க அந்தப் பெண் எழுதியதா கச் செல்லப்படும் 500 காதல் கடிதங்களையும் பொலீசாரிடம் காட்டினர் தான் மனம் விரு ம்பிய தனது காதலனுடன் ஓடிப்போனதாக ஹீன் மெனி க்காவும் தனது வாக்கு மூலத் தில் தெரிவித்தார்.

பொலீசார் அவர்களை இரு வரையும் விடுதலை செய்தனர்.

இதுதான் வாழ்க்கை!

காரைநகரிலுள்ள பலிகாடு என்னும் இடத்தைச் சேர்ந்த 55 வயதான ஆறுமுகம் சவுந் தரம் என்ற பெண்மணி 'எட் டுக் இரக சேர்க்கை' காரண மான வீடையை ஓழிக்கும் நோக்கத்தோடு அருச்சனை செ ய்வதற்காகக் கோயிலுக்குச் சென்று கொண்டிருக்கையில் வழியில் நாகசர்ப்பம் தீண்டி அந்த இடத்திலேயே மரண மானர்.

முற்பிறப்பை அறிந்த சிறுமி ஸ்வர்ணலதாவின் கதை!

ஸ்வர்ணலதாவின் தந்தை மேலும் கூறுகிறார்: "சிறுமிக்கு முந்திய பிறப்பில் உறவினரான ஸ்ரீ ஹரிபிரசாத் பாடக், சென்ற ஏப்ரல் 12-ஆம் தேதி சத்தர்புருக்கு வந்தார். சிறுமியைப் பல கேள்விகள் கேட்டார். தம் வீடு, குடும்பச் சாமான்கள், குடும்பத்தில் ஏற்பட்ட முக்கிய நிகழ்ச்சிகள் இவைபற்றியெல்லாம் விசாரித்தார். சில நாளைக்கெல்லாம் கட்னிக்கு அவர் திரும்பினர். 'பியா' (இப்போதைய ஸ்வர்ணலதா) மணம் புரிந்துகொண்ட ஊரான மைஹாரில் உள்ள அவளுடைய பழைய கணவருக்கும், பிறருக்கும் செய்தி சொல்லி அனுப்பினர். 'பியா' வின் கணவராயிருந்த சிந்தாமணி பாண்டே என்ற 62 வயக்து கிழவரும், முரளி என்ற மகனும் சத்தர்புருக்கு வந்தார்கள். அவர்கள் இருவரையும் ஸ்வர்ணலதா சட்டென்று அடையாளம் கண்டு கொண்டாள். மிகப் பழைய க்ரூப்—போட்டோ (கூட்டப் புகைப்படம்) ஒன்றிலும் பாண்டேயைச் சுட்டிக் காட்டி விட்டாள்."

பாடக் குடும்பத்தினர் அழைத்ததன் மேல், எம். எல் மிச்ரா தம் குடும்பத்தினரையும், ஸ்வர்ணலதாவையும் அழைத்துக்கொண்டு கட்னிக்குச் சென்றார். இவர்கள் அங்கே போய்ச் சேருமுன், பாடக் தம் குடும்பத்தில் பல பேருடைய போட்டோக்களைச் சேகரித்து, தம் வீட்டுக் கூடத்தில் மாட்டி, அலங்கரித்திருந்தார். பாடக்கின் வீட்டுக்கு ஸ்வர்ணலதா வந்து சேர்ந்ததும் முதல்முதலாக ஒரு வேப்ப மரத்தைப்பற்றித் தான் விசாரித்தாள். அந்த வேப்ப மரம் சமீபப் புயலிலே விழுந்து விட்டது தம் முந்திய பிறப்புத் தம்பிகளையும் பாடக் குடும்பத்தைச் சேர்ந்த பிறரையும் ஸ்வர்ணலதா அடையாளம் கண்டு சொன்னாள். இது மட்டும் அல்ல; ஒரு கூட்டத்துக்கு நடுவே நின்றுகொண்டிருந்த பழைய வேலைக்காரன் ஒருவனையும் கண்டு பிடித்துவிட்டாள். பாடக்கின் தாய் தந்தையருடைய படங்களையும் சுட்டிக் காட்டினாள்.

வேறு பல பரீட்சைகள் செய்தார்கள். எல்லாவற்றிலும் சிறுமி தேறிவிட்டாள்.

கட்னியில் பாடக் சகோதரருடன் தங்கியிருந்த நான்கு நாளும் தன் எல்லாப் பிறப்பைப்பற்றியெல்லாம் ஸ்வர்ணலதா கூறினாள்! இந்தப் பிறப்பில் இதுவரைக்கும் மத்தியப் பிரதேச எல்லையை விட்டே தாண்டாத அவள், அஸ்லாமியப் பாட்டுக்களையும் பாடினாள்.

மரியாதைக்குரிய பெரிய மனிதர்கள் எவராவது ஆவலோடு அவளை விசாரித்தாலும் சரி, யாரவது அநியாயமாக அவளைத் திட்டினாலும் சரி ஸ்வர்ணலதாவுக்குப் பளிச்சென்று அவளுடைய பூர்வ ஜன்ம நிகழ்ச்சிகளெல்லாம் ஞாபகம் வருகின்றன. பூர்வ ஜன்மஞாபகம் வரும்போதெல்லாம் இப்போதைய சூழ்நிலையே அவளுக்கு மறந்துபோகிறது; ஏதோ மங்கலான பூர்வ ஜன்ம ஞாபகங்களில் மூழ்கி விடுகிறாள்.

பழைய ஞாபகங்களை வெளியிடும் போது, அவளுடைய முகத்திலே ஓர் அமைதியும், விசாரமும் படர்கின்றன. அஸ்லாமியப் பாட்டுக்களைப் பாடும்போது, மர்மமான பூர்வஜன்ம வாசனை அவளைத் தூண்ட, தன்னை மறந்து அஸ்லாமிய நடனம் ஆடத்தொடங்கிவிடுகிறாள். தான் நேரே சம்மந்தப்பட்ட விஷயங்களைத் தவிர, ஊரிலும் மாகாணத்திலும் நிகழ்ந்த மாறுதல்களும் கிளர்ச்சிகளுங் கூடத் தனக்கு ஞாபகம் வருவதாக அவள் சொல்லுகிறாள்.

முன் ஜன்மத்தில் பாடக்கின் குடும்பத்திலே ஸ்வர்ணலதாவை எல்லாரும் மதித்து, அவளுக்குக் கீழ்ப்படிந்தார்களாம். இப்போதும் அதேபோலத் தன்னை மதிக்க வேண்டும் என்று அவள் ஆசைப்படுகிறாள். அவளுடைய பூர்வஜன்ம உணர்ச்சித் தளைகள் இன்னும் அவளிடம் இருந்து வருகின்றன. கட்னி, சத்தர்புர் இரண்டு ஊர்கள் மீதும் அவளுக்குப் பற்று இருக்கிறது. அந்த இரண்டு இடங்களிலும் சிறிது சிறிது காலம் மாறி மாறி வசிக்க வேண்டும் என்று அவள் ஆசைப்படுகிறாள். ●

"நான் பிரதமர் ஆனால்..."

சினிமாவைப்பற்றி மகாத்மாவின் உரை!

சினிமாவினால் நாம் எவ்வளவோ விஷயங்கள் கற்றுக்கொள்ள முடிகிறது. நம் அறிவு வளருகிறது என்று சிலர் கூறுகிறார்கள். இது சரி என்று எனக்குத் தோன்றவில்லை. சினிமாக் கொட்டகைகளில் மணிக்கணக்காய் உட்கார்ந்திருக்கும்போது நாம் சரியாக மூச்சு விடக்கூட முடியாமல் திணறித் திண்டாடுகிறோம்.

எனக்கு அதிகாரம் இருந்தால் நான் நாட்டிலுள்ள சினிமாக்கொட்டகைகளையெல்லாம் மூடிவிட்டு அவைகளை பல்வேறு கைத்தொழில்களைப் போதிக்கவும், தேர்ச்சிபெற்ய தொழிலாளர்களைக் கொண்டு பலவகையான பொருட்களை உற்பத்தி செய்யவும் தொழிற்கூடங்களாகப் பயன்படுத்துவேன்.

என்னை எவரேனும் இந்த நாட்டின் பிரதமராக ஆக்கினால், முதன் முதலில் என்ன செய்வேன் தெரியுமா? நெல், மாவு அரைக்கும் ஆலைகள் அனைத்தையும் மூடிவிடுவேன். எண்ணெய் ஆட்டுவதற்காக உள்ள யந்திரங்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தி, நாட்டுச் செக்கில் எண்ணெய் ஆட்டும்படி செய்வேன். இப்போதுள்ள நூல்—துணி மில்களையெல்லாம் இடித்துத் தரைமட்டமாக்காவிட்டாலும் அவை மேலும் வளருவதற்கு இடமே கொடுக்க மாட்டேன். புதிதாக மில்கள் அமைக்க அனுமதிக்கவே மாட்டேன். சினிமாப் படங்களையெல்லாம் நிறுத்திவிடுவேன்; ஆனால் நல்ல போதனையளிக்கும் படங்களையும் இயற்கைக் காட்சிகளைக் காட்டுபவற்றையும் விதிவிலக்காக அனுமதிப்பேன். பாட்டுக்கும் கூத்துக்கும் அனுமதியளிக்கமாட்டேன்.

இதனால் எனக்கு நாட்டியக் கலையும் இசைக் கலையும் பிடிக்காது என்று நினைக்க வேண்டாம். நாட்டியக் கலையில் எனக்கு மதிப்புண்டு. இசைக் கலையும் எனக்கு பிடித்தமானது; தரமறிந்து அதை அனுபவிக்கவும் எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் வாலிப வயதினரான ஆண்களும் பெண்களும் உள்ளத்திலும் நடத்தையிலும் கெட்டுப்போவதற்கு எந்தப் பாடலும் மற்றவையும் காரணம் ஆகின்றனவோ அவற்றை நான் தடுத்தேதான் தீருவேன்.

—"கிராமராஜ்யம்"

கடவுளின் கதை

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

இங்கே ஒருயாகம் நடக்கிறது. எத்தனையோ பேர் கடினமாக உழைத்துப்பிழைத்தும், கடன்பட்டும் வாங்கிய கூப்பனரிசியைக் கூட இங்கே கொண்டு வந்து 'கொட்டி' விட்டுப் போகிறார்கள். வீட்டில்போய் என்ன செய்கிறார்களோ.....! எனக்கு இப்போது நிம்மதியேயில்லை. உனக்குப் புண்ணியமாய்ப்போகும் என்னைப் பழைய இடத்திலேயே சேர்த்து விடுகிறாயா.....? இதுதானப்பா நான் உன்னிடம் கேட்கும்வரம்!" என்று காவல் சாமி என்னிடம் கூறியது.

"என்ன வரமா கேட்கிறீர்?" என்றேன் அதனுடைய பேச்சைக் கேட்க எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

"ஓமாப்பா! வரம்தான் கேட்கிறேன், உன்னிடம்தான் கேட்கிறேன்; கண்டிப்பாக நீ அருள் செய்யத்தான் வேண்டும்" என்று கூறியது.

நான் சிறிது நேரம் யோசித்தேன் அதனுடைய முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அத்தோடு அதன் சொற்களிலும் உண்மையிருப்பதாகவே எனக்குப் பட்டது.

தெய்வம் வரம் கேட்கும்போது மறுப்புச் சொல்லலாமா?

நான் கடவுளுக்கு அருள் பாலித்தேன்!

உங்கள் காலபலன்

இந்த வாரம் எப்படி?

"ரவி" சோதிடர்

18-2-62 முதல் 24-2-62 வரை

மேடம்: மாதாவுக்குச் சுகவீனம் காணப்படுகிறது. ஆனால் தொழிலைப் பொறுத்தவரையில் முன்னேற்றமுண்டு. வேலைகள் அதிகமாக இருந்தாலும் தகுந்த லாபமும் கிட்டும் எதிர் வரும்காலம் நன்றாக இருப்பதால் முயற்சிகளுக்குத் திட்டமிடலாம்.

இடபம்: உங்கள் முயற்சிகளில் சிறு மாற்றங்கள் விரைவில் காணப்படும். தொழில்களில் முன்னேற்றம் காணப்பட்டாலும் பொறுப்புகளும் அதிகமாக இருக்கும். பிதாவுக்கு கஷ்டமும் காணப்படுகிறது.

மிதுனம்: இந்த வாரத்துடன் உங்களின் சங்கடங்கள் சில நீங்கலாம். பொருள் நிலையிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமுண்டு. தேகநிலையும் திருந்தும் ஆனால் மனதில் அமைதி நிலவாது.

கடகம்: குடும்பச் சூழ்நிலை தொடர்ந்து சங்கடமாகவே காணப்படுகிறது. தேகநிலையும் சிறிது நாட்களுக்குத் தொடர்ந்து பாதிக்கப்படலாம் எல்லா விஷயங்களிலும் அவதானமாக நடக்கவும்.

சிங்கம்: தொழிலில் முன்னேற்றமுண்டு. நீங்கள் நினைத்தவிதமே கருமங்களை முடிப்பது இலகுவாக இருக்கும்; ஆனால் குடும்பத்தில் சில தகராறுகள் காணப்படுகின்றன.

கன்னி: இந்தவாரம் எதிர்ப்புகளைச் சமாளிப்பது கஷ்டமாக இருக்கும். மனதில் அமைதி நிலவாது. அதிகபிரயாசத்தின் பின்பே கருமங்கள் கைகூடும்.

துலாம்: உங்கள் விஷயங்களில் பல எதிர்ப்புகள் காணப்படுகின்றன. உறவினருடன் விரோதங்களும் ஏற்படும். வாகனங்களாற் சங்கடங்கள் உண்டு. ஆனால் வார இறுதியின்பின் பல முன்னேற்றங்களுண்டு.

விருச்சிகம்: குடும்பச் சூழ்நிலையில் நல்ல மாற்றங்களுண்டு. வீட்டில் சந்தோஷகரமான சம்பவங்கள் நடைபெறும். கமத்தொழிலிலும் முன்னேற்றமுண்டு.

தனுசு: வாரத்தின் முதலிரண்டு நாட்களையும் அவதானதாக நடக்கவும். மனதில் அமைதி நிலவாது. தேகசுகவீனமும் உறவினருடன் சச்சரவுகளும் ஏற்படும்.

மகரம்: வாரத்தின் முதல் நாளில் கருமங்களில் வெற்றியுண்டு திங்கள். செவ்வாய் கிழமையையும் புதன் காலையையும் அவதானமாகக் கணிக்கவும். வார இறுதியில் சில சங்கடங்கள் தீரும்.

கும்பம்: இந்த வாரஇறுதியில் உங்கள் பிரச்சினைகள் சில தீரும். செலவுள் அதிகமாக இருந்தாலும் வருவாயும் போதியது கிட்டும். புதன் பிற்பகலையும் வியாழன், வெள்ளிதினங்களையும் அவதானமாகக் கழிக்கவும்.

மீனம்: உங்களுக்கு இவ்வளவு நாட்களும் கிடைத்து வந்த வசதிகளும் உதவிகளும் சிறிது குறையலாம், ஆனால் குறிப்பிடத்தக்க விசேஷ மாற்றமெதுவுமில்லை. கருமங்களில் வெற்றியுண்டு. வாரத்தின் கடைசி நாளை அவதானமாகக் கழிக்கவும்.

சோதிடம்

உங்கள் பெயர், பிறந்தவூர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ. 5-00 போஸ்டல் ஓடர் அனுப்பினால் உங்கள் ஒரு வருட காலபலன் மிகச் சரியாக எழுதி அனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்து அனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூ. 3-00 அனுப்பினால் போதுமானது.

'ரவி' சோதிடர்,
226, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

Registered a news paper at the G. P. O.

புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

நாவலர் வாழ்க்கையில் நடந்தது இது!

அதிகாலை —

ஊருக்கு ஒதுக்குப்புறமான ஓரிடத்தில் ஒரு கல்லின்மேல் பல்துலக்கிக் கொண்டிருந்தார் ஆறுமுக நாவலர் அவர்கள். அச்சமயம் அவ்வழியாக வந்த ஒருவர் நாவலரைக் கண்டல் செய்யும் நோக்கத்தோடு நாவலரைப் பார்த்துக் கேட்டார்:

"கோவில்கட்டி தெய்வமென்று ஒரு கல்லை வைத்து வணங்குகிறீர்கள். இங்கு அதைப் போன்ற இன்னொரு கல்லின்மீது எச்சிலை உமிழ்கிறீர்களே....." நாவலர் புன்சிரிப்போடு கேட்டார்:

"நீங்கள் யார்? உங்களை எனக்குத் தெரியவில்லையே..... நீங்கள் இந்த ஊர்தானா?"

"இல்லை. எனது சொந்தஊர் சிதம்பரம். இங்கு கல்யாணம் செய்திருக்கிறேன்"

"உங்கள் தாயார், சகோதரிகள் எல்லோரும் சிதம்பரத்தில்தானே இருக்கிறார்கள்?"

"ஆமாம், எதற்காகக் கேட்கிறீர்கள்?"

"தாய் சகோதரிமார் எல்லோரும் சிதம்பரத்தி இருக்க அவர்களில் ஒருவரை மணம்செய்யாமல் இவ்வளவு தூரம் வரவேண்டுமா ஒரு கல்யாணம் செய்வதற்கு?"

அந்த மனிதரின் முகம் கேபத்தால் சிவந்துவிட்டது. "தாய், சகோதரிகளுக்கும், மனைவிக்கும் உமக்கு வித்தியாசம் தெரியவில்லையா?" என்றார் ஆத்திரத்தோடு.

"அந்த வித்தியாசம் தானப்பா இந்தக் கல்லுக்கும், கோவிலில் பிரதிஷ்டை செய்து நாம் வணங்கும் கல்லுக்கும்" என்றார் நாவலர் அமைதியோடு.

பரிசுக் கேள்வி.

செல்வி சிவாஜினி
ராஜயோகம்,
263, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கே:- மனிதர்களை விட மிருகம் சிறந்தது என்று சிலர் சொல்லுகிறார்களே, ஏன்?

ப:- மிருகம் பேசுவதில்லை. மனிதன் பேசுகிறான்!

இ. தர்மலிங்கம், நெடுந்தீவு

கே:- முதன் முதலில் வேலை நிறுத்தம் எந்த ஆண்டு, எங்கே ஆரம்பித்தது?

ப: 1921-ம் ஆண்டு, ஐரோப்பாவிலுள்ள கரிச்சுரங்க மொன்றில் வேலைபார்த்த தொழிலாளர்கள் தங்களுக்கு எட்டு மணிநேரம்தான் வேலைதரவேண்டுமென்று முதன் முதலில் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தனர். இந்த வேலை நிறுத்தத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதால் 13 தொழிலாளர்கள் அதே இடத்தில் கொல்லப்பட்டார்கள்! ஆனால், இந்த முதல் வேலைநிறுத்தம் தொழிலாளர்களுக்கு வெற்றியளிக்கவில்லை.

ஐ. பாலசுப்பிரமணியம்,
வேலணை மேற்கு.

கே:- ஆண்கள் பெண்களை வர்ணிக்கிறார்களே தவிர, பெண்கள் ஆண்களை வர்ணிப்பதில்லையே, இது ஏன்?

ப: கவிஞனுல்தான் இயற்கையைப் புகழ்ந்து சுவைபாட முடியுமே தவிர, இயற்கையால் கவிஞனைப் புகழ்ந்து கவிபாடமுடியாதே! இதனால் தான்!

சி. கந்தசாமி, கந்தரோடை.

கே:- மேல்நாட்டு விஞ்ஞானிகளைப்போல் ஏன் நம் நாட்டு விஞ்ஞானிகள் இருப்பதில்லை?

ப:- மேல் நாட்டில் விஞ்ஞானிகளை அரசாங்கம் மதித்துப் போற்றுகிறது. விஞ்ஞானிகளுக்குத் தேவையான சகல வசதிகளையும் அரசாங்கத்தினரே செய்து கொடுக்கிறார்கள். இவை எல்லாம் நம்நாட்டில் இல்லையே?

என். ஜே. ராஜன்,
கிளிநொச்சி.

கே: சின்னப்பாவும், ஹொன்னப்பாவும் ஏனப்பா ரேடியோவில் பாடுவதில்லை?

ப:- இந்த இரண்டு அப்பாக்களும் விண்ணுலகம் போய் விட்டார்களேயப்பா!

எம். ராஜா, மாந்தை.

கே:- கடிகைகள் சாவித்திரிக்கும் சரோஜா தேவிக்கும் உள்ள தகராறு இப்பொழுது எப்படி இருக்கிறது?

ப:- எந்தவித முன்னேற்றமும் இல்லை முன்போலவே தான் இருக்கிறது. 'பார்த்தால் பசிதீரும்' என்ற படப் பிடிப்பின்போது டைரக்டர் பீம்சிங் இருவரையும் மோதவிடாமல் மிகவும் கவனமாகக் கண்காணித்துக்கொண்டாராம்!

பி. ராஜநாயகம்,
கொழும்பு.

கே:- 'அமுதம்' ஆசிரியர் தமிழ்நெஞ்சன், தம் பத்திரிகையில் தம்மை புகழ்பெற்ற தத்துவ ஞானி என்று கூறித் தற்புகழ் பாடியிருக்கிறாரே, இதைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: இந்தியாவில் 'டுப் மன்னன்' தமிழ்வாணனைப்போல் இலங்கையில் 'சப்ஸா கிங்' தமிழ் நெஞ்சன் தோன்றியிருக்கிறார். இவருக்கு ஏன்தான் இந்த எடுப்போ தெரியவில்லை!

க பூராசா, யாழ்ப்பாணம்.

கே:- பெண் பொறுமை இழந்தால்.....?

ப:- ஆண் அங்கம் முழுவதும் காயங்களுடன் ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்படலாம்!

● சரோஜாதேவியும், சாவித்திரியும் ● பனங் கொட்டை ● பாசமலர் ● 'அமுதம்' ஆசிரியர் ● முதல் மொழி ● ராஜாஜி! ● வேலை நிறுத்தம் ● இயற்கையும், பெண்களும்! ● காதல்வரும் முன்னே..... ● இலங்கையின் ராஜதந்திரி.

கேள்வி-பதில்!

ரமணன்

வ. சிவா, சுண்டிக்குளி.

கே:- காதல் வரும் முன்னே ...

ப:- ஊதல் வரும் பின்னே!

சு. சுவாமிநாதன்,
பண்டத்தரிப்பு.

கே:- பனங்கொட்டையின் மேல் பாகத்திலா அல்லது கீழ்ப்பாகத்திலா முளை இளம் புகிறது?

ப:- மேல் பாகத்தில்தான்!

சீ. சதாசிவம்,
பெரியபோரதீவு.

கே:- இலங்கையின் சிறந்த ராஜதந்திரி யார்?

ப.- இறந்தவர்களில் சிறந்தவர் திரு. எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா. இருப்பவர்களில் சிறந்தவர் டாக்டர் என். எம். பெரேரா,

பி. சுப்பிரமணியம்,
யாழ்ப்பாணம்

கே:- உலகில் தோன்றிய முதல் மொழி எது?

ப:- நம் தமிழ் என்றுதான் ஆராய்ச்சியாளர் அபிப்பிராயப்படுகிறார்கள். இதுதான் றிய இடம் லெமூரியாக்கண்டம் என்று சொல்லுகிறார்கள், இந்தக் கண்டம்தான் தமிழ் இலக்கியங்களில் வர்ணிக்கப்படும் கன்னியா குமரி!

எஸ். கோபாலசிங்கம்.
செங்கலடி.

கே:- உலகின் சிறந்த அரசியல் ஞானி யார்?

ப:- ராஜாஜி! இதை தான் சொல்லவில்லை, 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை சொல்லுகிறது!

மு. இளையதம்பி, கொழும்பு:

கே:- தமிழை கொலை செய்பவர்களை என்ன வெண்டு அழைக்கலாம்?

(அச்சுப்பிழையல்ல!)

ப:- தாராளமாக உமது பெயரைச் சொல்லி அழைக்கலாமே!

வெளிவந்துவிட்டது! புதிய பதிப்பு!

தமிழ் மரபு

G. C. E. வகுப்புக்கான மொழிநூல்

* வித்தியாதிபதியின் அங்கீகாரம் பெற்றது.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
பண்டிதர் சோ. இளமுருகனார்

ஆகிய இருபெரும் தமிழறிஞர்களும் மிகவும் புகழ்ந்து பாராட்டி அணிந்துரை வழங்கியிருக்கிறார்கள்,

எழுதியவர்:

வித்துவான் பொன். முத்துக்குமாரன் பி. ஓ. எல்.

விலை ரூபா 3-50 [தபாற் செலவு சதம் 40]

விற்பனையாளர்;

ஆனந்தா அச்சகம் - புத்தகசாலை,

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

உங்களுக்குச் சேவை செய்ய வருகிறது!
நவீன தயாரிப்பாக

'மில்க்வைற் சோப்'

புதிய கவர்ச்சிகரமான மேலுறையுடன்

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச, வரதராசன்.
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348, தந்தி: அச்சகம்.